| | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | தேனி | காலம் : | 17/01/2024 | முதல் | 21/01/2024 | |
| அறிக்கை எண் : | 005/ 2024 | வெளியீட்டு நாள் : | 16/01/2024 | | | |

## தேனி மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 31°- 32° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 21° - 23° செல்சியஸ் ஆகவும் பதிவானது.

| கடந்தவார வானிலை (11.01.2024 முதல் 15.01.2024) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 21-01-2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11/01 | 12/01 | 13/01 | 14/01 | 15/01 | தேதி | நாள்-1 17/01 | நாள்-2 18/01 | நாள்-3 19/01 | நாள்-4 20/01 | நாள்-5 21/01 |
| 0.2 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 29 | 32 | 31 | 32 | 32 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 26 | 26 | 27 | 27 | 27 |
| 23 | 23 | 21 | 22 | 21 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 17 | 18 | 18 | 17 | 17 |
| 4 | 5 | 4 | 4 | 3 | மேக மூட்டம் (ஆக்டா) | 3 | 0 | 0 | 1 | 1 |
| 84 | 80 | 83 | 88 | 82 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 80 | 80 | 90 | 90 | 80 |
| 55 | 53 | 53 | 53 | 50 | | 40 | 40 | 50 | 40 | 40 |
| 7 | 9 | 7 | 6 | 7 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 4 | 6 | 6 | 6 | 6 |
| வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | தென் கிழக்கு | காற்றின் திசை | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | கிழக்கு | வட கிழக்கு |

## குறுஞ்செய்தி :

அடுத்த 5 நாட்களுக்கு அதிகபட்ச வெப்பநிலையானது 26°-27° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 17°-18° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் தெளிவாக காணப்படும். மணிக்கு 4 முதல் 6 கி.மீ வேகத்தில், கிழக்கு மற்றும் வடகிழக்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

### அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலை முன்னறிவிப்பு (19 - 25 ஜனவரி 2024):

### மழைப்பொழிவு :

19-01-2024 - 25-01-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் பொதுவாக வறண்ட வானிலையே நிலவ வாய்ப்பு உள்ளது

### அதிகபட்ச வெப்பநிலை :

19-01-2024 - 25-01-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது இயல்பானது முதல் இயல்பை விட சற்று குறைவாக காணப்படும். 26° செல்சியஸ் முதல் 32° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

19-01-2024 - 25-01-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும். 16° செல்சியஸ் முதல் 20° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

அடுத்த 5 நாட்களுக்கு பெரும்பாலும் வறண்ட வானிலேயே நிலவ வாய்ப்பு உள்ளது. இந்த காலகட்டத்தில் விவசாயிகள் பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : வாழை, பருத்தி, கால்நடை.**

**வாழை:**
வாழையில் கிழங்கு துளைக்கும் கூன் வண்டு தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இவ்வண்டு இளம் மற்றும் வளர்ந்த மரங்களைத் தாக்கி பொருளாதார சேதத்தை ஏற்படுத்தும்.

பாதிக்கப்பட்ட வாழையின் இலைகள் மஞ்சள் நிறமாகி, வளர்ச்சி குன்றி, வேர் பாதிக்கப்பட்டு, மகசூல் குறையும்.

நடுவதற்கு முன்னால் ஒரு குழிக்கு ஆமணக்கு புண்ணாக்கு 250 கிராம் இடுவதால் இப்பூச்சியின் தாக்குதலை தடுக்கலாம்.

60-100 கிராம் வேப்பங் கொட்டைப் பொடி அல்லது வேப்பம் புண்ணாக்கினை, கிழங்குகளை நடும் போதும் பின்பு 4 மாதங்கள் கழித்து ஒரு முறையும் இடுவதால் பூச்சித் தாக்குதல் குறைவதோடு, நல்ல மகசூல் பெறலாம்

**பருத்தி:**
பருத்திப் பயிரைத் தாக்கும் இளஞ்சிகப்பு காய்ப்புழுவின் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இதன் இளம் புழுக்கள் சப்பைகள், மொக்குகள், பூக்கள் மற்றும் இளம் காய்களையும் தாக்கி அழிக்கும். தாக்கப்பட்ட மொட்டுகள் உதிர்ந்து விடும், மலர்கள் நெருக்கமாய் குவிந்து காணப்படும், வளர்ச்சியடைந்த புழு காயினைத் துளைத்து உள்ளே சென்று உண்டு சேதம் விளை விக்கும், விதைகளையும் தாக்கும். இதனால் தாக்கப்பட்ட பஞ்சுகள் கரை படிந்து காணப்படும். இதனைக் கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு 100 மில்லி என்ற அளவில் குளோரன்டிரானிலிப்ரோல் அல்லது 300 மில்லி என்ற அளவில் பிப்ரோனில் இவற்றில் ஏதேனும் ஒரு மருந்தினை கலந்து தெளிக்கவும்.

**கால்நடை:**
ஆடு வளர்க்கும் விவசாயிகள் தங்களின் வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளில் வெளிப்புற ஒட்டுண்ணிகளை நீக்க 2 மில்லி பூட்டாக்ஸ் மருந்தினை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து ஆடுகளில் வெளிப் புறங்களில் மட்டும் பூச வேண்டும்.